**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12.07.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலையில் பூச்சிப்பொறிகளின் பலன் பற்றிய கருத்தரங்கு**

தமிழக அரசின் வேளாண் அமைச்சகத்தின் முக்கிய முயற்சியானது நமது விவசாயிகளுக்கு இயற்கை முறை விவசாயத்தை இன்னும் சிறந்த முறைகளில் கடைப்பிடித்து அதன் மூலம் வேளாண்மையில் வரும் பயன்களை மேம்படுத்துவதாகும்.

இந்த வாரம் இந்த முக்கிய நோக்கத்துடன் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பூச்சிப்பொறிகளின் மூலம் ரசாயனப் பூச்சிக்கொல்லிகளை தவிர்க்கும் முறையாக அப்பொறிகளின் பயன்பாடு பற்றிய ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்றது.

தமிழக வேளாண் அமைச்சகத்தின் பயிர்பாதுகாப்பு அலுவலகம் மற்றும் வேளாண் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு ஆய்வுமையம் இணைந்து இயற்கை முறை விவசாய பிரதிநிதிகளை வரவழைத்து அவர்களுக்கு மேம்பட்ட பூச்சிப்பொறிகளை இலவசமாக வழங்கி அவற்றை தங்கள் வேளாண் மற்றும் தோட்டப் பயிர்களில் எப்படி உபயோகிக்க வேண்டும் என பயிற்சி தரப்பட்டது.

இந்த முயற்சிக்கு முக்கிய தூண்டுகோலாக இருந்து வேளாண் பல்கலை துணைவேந்தர் வெ. கீதாலட்சுமி மற்றும் பல்கலை பயிர்பாதுகாப்பு ஆய்வு மைய தலைவர் முனைவர், சாந்தி அவர்களும் பங்கேற்றனர்.

சென்னையிலுள்ள சன் அக்ரோ பயோடெக் ஆய்வு மையத்தின் இயக்குனர் முனைவர் சித்தானந்தம் மற்றும் பிரபாகரன் இணைந்து எழுதிய பூச்சிப் பொறிகளின் பயன்கள் பற்றிய கையேடு வெளியிடப்பட்டது.

இந்தப் பயற்சிக் கருத்தரங்கில் பங்கேற்ற முக்கிய விவசாயிகளின் பிரதிநிதிகள் மூன்று குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு குழுவும் சுமார் ஒருமணி நேரம் கீழ்க்கண்ட மூன்று முக்கிய தொழில்நுணுக்கத்தை விபரமாக பயின்றனர். இதற்கு வேளாண் பூச்சியியல் வல்லுனர்களும் குழுக்களாக பிரிந்து அவற்றை விளக்கினர்.

1.உயிரியல் மற்றும் தாவர சற்றின் மூலம் தயாரிக்கும் பூச்சிக்கொல்லி வகைகள்

2.உயிரியல் பூச்சிக்கட்டுப்பாட்டிற்கு பயன்படுத்தும் ட்ரைக்கோ கிரமா மற்றும் பயன் தரும் பூச்சிகள்

3.பூச்சிகளை கவர்ந்து கொல்லப் பயணபடுத்த உள்ள பொறிகள் மற்றும் ஈர்ப்பான் வகைகள்

இந்த முழு நாள் பயிற்சி மற்றும் கருத்தரங்கு முகாமில் கலந்துகொண்ட அனைத்து விவசாயிகளும் மிகுந்த பயனுள்ள வகையில் அமைந்ததாக தெரிவித்தனர். இந்த பயிற்சி முகாமின் பயன்களை மேலும் பல விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்க மீண்டும் பல பயிற்சி கருத்தரங்குகள் நடத்திட வேண்டினர்.

கருத்தரங்கின் இறுதியில் பல்வேறு வேளாண் துறை வல்லுனர்களும், வேளாண் பல்கலை துணைவேந்தரும் சிறப்புரையாற்றினார்கள். மேலும் வேளாண் அமைச்சக பயிர்பாதுகாப்பு இயக்குனர் - திரு. சண்முகசுந்தரம் மற்றும் வேளாண் பல்கலை பூச்சியியல் தலைவர் முனைவர். ஜெயராஜன் நெல்சனும் விரிவுரையாற்றினர். கருத்தரங்கில் பங்கேற்ற அனைவருக்கும் சன் அக்ரோ பயோடெக் ஆய்வு மையத்தின் தலைவர் - முனைவர் சித்தானந்தம் நன்றி தெரிவித்தார். இத்துடன் தேசிய கீதத்துடன் இப்பயிற்சிக் கருத்தரங்கு முடிவுபெற்றது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**